# அடிப்படை உரிமைகளை பறிக்கத் திட்டமா?

**ஒத்திவைப்புப் பிரேரணை மீது பா. உ. பேச்சு!**

அரசியல் சட்டத்தில் எழுதப்பட்டுள்ள அறை குறை அடிப்படை உரிமைகளைக்கூட பறிப்பதற்கு அரசாங்கம் திட்டமிடுகிறதா? என்ற கேள்வியை தேசிய அரசுப் பேரவையில் ஒத்திவைப்பு பிரேரணையின் மீது 6-2-76 வெள்ளிக்கிழமை உடுவில் பா. உ. திரு. வி. தர்மலிங்கம் எழுப்பினர்.

அவர் அப்போது கூறியதாவது:—

"அரசியல் சட்டம் உறுதிப்படுத்தியுள்ள அடிப்படை உரிமைகளை குறைக்கும் அல்லது கட்டுப்படுத்தும் நடவடிக்கைக்கு எதிராக ஒருவரும் எழுதவோ பேசவோகூடாதெனத் தடைசெயயும உத்தரவு ஒன்றை ஜனாதிபதி பிறப்பித்திருக்கிறர். அடிப்படை உரிமைகளைக் கட்டுப்படுத்த அரசாங்கத்தினல் மட்டுமே முடியும. அபபடியெனில் மககளின் அடிப்படை உரிமைகளை கட்டுப்படுத்த அரசாங்கம் திட்டமிட்டு வருகிறதா? இவ்விஷயத்தில் திருமதி இந்திரா காந்தியை பின்பற்ற அரசு முயலுகிறதா என்பதை அறிய விரும்புகிறேம்.

இம்மாதம் 4ம் திகதி தமிழ்ப் பகுதிகளில் நாம் உதயசூரியன கொடிகளை ஏற்றினேம். இந்திய விடுதலைப் போராட்ட காலத்தில் 1930ம் ஆண்டு சனவரி 26ம் திகதி இந்தியா முழுவதும் மகாத்மா காந்தியடிகள் இந்திய தேசிய காங்கிரசின் கொடியை கொடி வணக்கத்துடன் ஏற்றிவைத்தார். அதுபற்றி அவர் 'யங் இந்தியா' பத்திரிகையில், "கொடியை ஏற்றி வைதததுடன் சுதந்திரம் கிடைத்துவிட்டது என்று அர்த்தம் அல்ல; ஆனல் சுதந்திரத்திற்கான அறிகுறி அதுவாகும்" என்று எழுதியிருந்தார். அந்த நிலையிலிருந்துகொண்டுதான் தமிழர் கூட்டணியினராகிய நாங்களும் கொடியேற்றினேம்."

இவ்வாறு திரு. தர்மலிங்கம் குறிப்பிட்டார். அவரது பேச்சுக்குப் பதிலளித்த பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சர் திரு. லக்ஸ்மன் ஜெயக்கொடி அடிப்படை உரிமைகளை மறுக்கும் நோக்கம் அரசுக்கு இல்லையென்றூர்.

# சுதந்திரன்

SUTANTIRAN

★ விலை சதம் 35. வ.ஆ. 2007, தை 28, ஸபர் 10, (11-2-76) புதன் புத்தகம் 29, இதழ் 33

## மட்டக்களப்பு அரசியல் அதிகாரி நீதிமன்றத்தில் சரணடைந்தார்!

30—1—76 மட்டக்களப்பு நீதிமன்றத்தில் இடம் பெற்ற கடையுடைப்பு வழக்கின் போது, மட்டக்களப்பு மாவட்ட அரசியல் அதிகாரியும், தேசிய அரசுப்பேரவை உறுப்பினருமான திரு. ராஜன் செல்வநாயகம் சட்டத்தரணிகளின் உதவியோடு சரணடைந்தார். நீதிபதியின் பகிரங்க பிடிவிறாந்தையடுத்தே அவர் நீதிமன்றத்துக்கு வந்து சரணடைந்தாராம். அவர் சார்பில் அவரது சட்டத்தரணி மன்னிப்பும் கோரினராம் மட்டுநகரில் நீதி தலை தூக்கத் தொடங்கிவிட்டதென மக்கள் பேசிக்கொள்கின்றனர்கள்.

# "சுதந்திரனுக்கு தடையா...?"

சென்ற வெள்ளிக்கிழமையும் சனிக்கிழமையும் சுதந்திரன் வாசகர்கள் துடிதுடித்துப் போயினர். 8.2.76 சுதந்திரனை காணுததே அவர்களது இந்தப் பதைபதைப்புக்குக் காரணமாகும். சுதந்திரன் எங்கே? ஏன் வரவில்லை என்று கேட்டு நமது அலுவலகத்துக்கு வந்த தொலைபேசி அழைப்புக்களும் 'ட்ரங் கால்'களும் பல நூற்றுக்கணக்கானவை; பதில் சொல்லி நமது வாய் ஓயுமளவுக்கு வாசகர்களின் தொலைபேசி அழைப்புக்கள் வந்து குவிந்தன; நேரடியாக அலுவலகத்துக்கு டாக்சிகளிலும் கால்நடையிலும் பஸ்களிலும் வந்து சுதந்திரனைப் பற்றி விசாரித்தவர்கள் பல நூற்றுக் கணக்கானேர். சுதந்திரனுக்கு தடையாமே என்று ஏக்கம் தோய்ந்த குரலில் கேட்டவர்கள் பலர்:

திடீரென அரசாங்கம் செய்தித்தணிக்கையைகொண்டு வந்ததால் சென்ற ஞாயிறு இதழை எம்மால் விற்பனைக்கு விடமுடியவில்லை.

5-2-76 நள்ளிரவு வெளிவந்த பத்திரிகைத் தணிக்கைச் சட்டத்தின் பிரகாரம், 8-2-76 திகதி சுதந்திரனில் நாம் பிரசுரிக்கவிருந்த செய்திகளையும் கட்டுரைகளையும் 6-2-76 வெள்ளிக்கிழமை நண்பகல் இதற்கென நியமிக்கப்பட்ட தகுதி வாய்ந்த அதிகாரிக்கு அனுப்பிவைத்தோம். அந்தச் செய்திகள், கட்டுரைகளைப் பிரசுரிப்பது சம்பந்தமாக தகுதிவாய்ந்த அதிகாரியின் தீர்ப்பு நாம் இதை எழுதிக்கொண்டிருக்கும் (9-2-76 மாலை 4 மணி) நேரம்வரை கிடைக்கவில்லையென்பதையும் வாசகப் பெருமக்களுக்கு அறியத்தருகிறேம்.

சுதந்திரன் தமிழ்பேசும் மக்களின் இதயத்திலமர்ந்துள்ள ஏடு; அதற்கோர் இன்னல் என்றல் தமிழ் மக்கள் துடிதுடித்துப்போவார்கள் என்பது நமக்குத் தெரியும். சுதந்திரன் மீது மக்கள் வைத்திருக்கும் அபிமானத்துக்கு நமது இதயம் கனிந்த நன்றி.

## கள்ள குடியேற்ற தடுப்புமுகாமில் தமிழர்கள் அவதி!

தலைமன்னர் கள்ளக்குடியேற்றத் தடுப்பு முகாமில் வாடும் இந்தியத் தமிழர்களின் நிலை மிகவும் மோசமடைந்து வருவதாக அறியப்படுகிறது இதன் விளைவு அங்கு உள்ள கைதிகள் உடல் நிலை பாதிக்கப்பட்டு அடிக்கடி வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்படுகிறர்களாம்.

இதுவிடயமாக எமது நிருபர் அம்மாவட்ட மருத்துவ அலுவலகர் டாக்டர் பொன் சத்தியநாதனிடம் அபிப்பிராயம் கேட்டபோது பின்வரும் தகவல்களை அவர் வெளியிட்டார்:—

அகதிகள் பலர் வாரங்களாக, மாதங்களாக, ஆண்டுக்கணக்காகவும் இம்முகாம்களில் இருப்பதாகவும், அவர் [illegible] யாலும் ஊட்டக்குறைவின்மையாலும், புரதம், கலோரி பற்றுமையாலும் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களின் உடல் நிலையை அவதானிக்கும் பொழுது. ஒரு நாளைக்கு ஒரு வேளை உணவுதானும் திருப்தியாகக் கிடைப்பதில்லை போல் தோன்றுகிறதுமேலும் அவர்களிடையே காணப்படும் 'ஸ்கேபிஸ், அமீபயாயாசிஸ், வயிற்றுப்புழு, போன்ற தொற்றுவியாதிகள் அவர்களுக்கு வசதியான மலசலகூடமும், நீர்வசதியின்மையும், சுகாதாரவசதியின்மையும் அங்கு நிலவுகிறது என்பதைக் காட்டுகிறது.

இவர்களது உணவு சுகாதார வசதிகளின் மேற்பார்வை பயிற்றப்பட்ட ஒரு மருத்துவரிடம், ஒப்படைக்கப்பட்டாலன்றி இது நிவர்த்தியாகாது என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

இவர்களின் இந்நிலைக்குக் காரணம் என்ன என்பதை ஆராய்ந்தவிடத்து இவர்களது உணவு விநியோக ஒப்பந்தகாரர் அகதிளுக்கு மிகவும் கேவலமான உணவை விநியோகம் செய்வதன் மூலம் கொள்ளை இலாபம் அடிப்பதாகவும், இதற்குப் பக்கதுணை தேடும் பொருட்டு அவர்களுக்குப் பொறுப்பாக இருக்கும் பொலிசாருக்கு இவ்வொப்பந்தகாரர் சாராய விருந்து நடத்துவதாகவும் மிகவும் நெருங்கிய நம்பத் தகுந்த வட்டாரங்களில் பரவலாகப் பேசப்படுகிறது.

## தந்தை செல்வா அனுதாபம்!

புத்தளத்தில் பொலிசாரின் துப்பாக்கிச் சூட்டினல் உயிரிழந்த இஸ்லாமிய சகோதரர்களுக்கும், அவர்களது குடும்பத்தாருக்கும் தனது சார்பிலும், தமிழர் கூட்டணியின் சார்பிலும் தந்தை செல்வா தனது அனுதாபத்தைத்தெரிவித்துக் கொண்டிருக்கிறர். இத்துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம்பற்றி விசாரணைக் கமிஷன் நியமிக்குமாறு அவர் பிரதமரிடம் கோரியிருக்கிறர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘பழம் நழுவிப் பாலில் விழுந்தது...!’

# தி. மு. க. தோழர்களுக்கு கருணநிதி கடிதம்!

உடன்பிறப்பே

“நீடிக்காதே! நீடிக்காதே”!
“அய்யா! நீடிக்காதே!”

இப்படி வயிற்றில் அடித்துக்கொண்டு கத்துகிருர்கள். வாய்வலிக்க அலறுகிருர்கள். கணகள் பிதுங்குகின்றன அவர்களுக்கு! கைகள் கூட வலியெடுத்துப் போய்விட்டன; வயிற்றில் அடித்துக்கொண்டு!

“இது தொழிலாளர் விரோத அரசாம்!”

இப்படி ஒரு கும்பல் குய்யோ முறையோ என்று கூப்பாடு போடுகிறது. கோவையிலே வேலையின்றி பாதிக்கப்பட்ட தொழிலாளர்கட்கு முதலமைச்சர் நிதியிலேயிருந்து மொத்தம் ஆறு லட்சம் ரூபாய் வரையிலே வழங்கிய கழக அரசைப்பார்த்து, இப்படிக் குற்றம் சாட்டுகிருர்கள். போனசுக்காக வாதாடி வெற்றி பெற்ற நமது என். வி. என். தொழிலாளர் அமைச்சராகப்பணியாற்றியதை மறந்துவிட்டுப்பேசுகிருர்கள்; இத்தப்போனஸ் போராட்ட வீரர்கள்!

இரவு பகல் எந்தநேரமும் தொழிலாளர் பிரச்சினைகளைப்பேசித் தீர்ப்பதிலே அக்கறை காட்டுகிற நண்பர் ராஜாராம் அவர்களைத் தொழிலாளர் அமைச்சராகப்பெற்றிருக்கிற இந்த அரசைப் பார்த்துத்தான் இப்படி ஒரு அபாண்டத்தை வீசுகிருர்கள்.

இந்த அரசு இருபது அம்சத திட்டங்களை நிறைவேற்றுவதில் அக்கறை காட்டவில்லையாம். சட்டப்பேரவையில் நேருக்கு நேராகத்தந்த விபரங்களுக்குப் பிறகும், தாங்கள் சொன்னதையே திரும்பத் திரும்பச்சொல்லி, அதனை மெய்யாக்கி விடலாமென்று கனவுகாண்கிருர்கள்.

நீடிக்கவிட மாட்டார்களாம்! பாவம்; பழுத்த ஜனநாயகவாதிகள், மனுவும் கையுமாக மாளிகைகளின் மதிலோரங்களில் காத்துக்கிடக்கிருர்கள்.

1967ல் ஆட்சிப்பொறுப்பை ஏற்ருேம். நான்கு ஆண்டு காலம் அரசோச்சினேம். 1971ல் நாடாளுமன்றத்திற்குத் தேர்தல் நடைபெற்றபோது, நாமும் சட்டப்பேரவைத் தேர்தலை நடத்துவதற்கு முன் வந்தோம். அந்த வெற்றிக்குப் பிறகு ஐந்தாண்டு காலம் ஆட்சி நடத்தியிருக்கிருேம். பதவிக்காலம் முடிவதற்கு இன்னும் ஓரிரு மாதங்களே உள்ளன. இதற்குள்ளாக இந்த ஐந்தாண்டுகளில் “கழக அரசு, இதோ கவிழப்போகிறது; அதோ கவிழப்போகிறது - காலையில் கவிழும், மாலையில் கவிழும்” என்றெல்லாம் ஆசை அலைமோத பேய்க் குரல் எழுப்பியவர்கள். தங்கள் எண்ணம் நிறைவேருத எரிச்சலில்,



“இப்போது இன்னும் சில நாட்கள் தானே!” என்று ஒருவரைப் பார்த்து ஒருவர் இளித்தும், சிரித்தும், கெக்கலிப்புக் கொட்டியும் தங்கள் மன அரிப்பைத் தீர்த்துக் கொள்கின்றனர்.

தேர்தல் வேண்டுமென்று கேட்கிறது தி. மு. க.!“ நீடிக்கக் கூடாது” என்று ஓலமிடுகிறவர்கள், தேர்தல் வேண்டுமென்று கூறுகிருர்களா; அது தான் இல்லை. ஜனதிபதி ஆட்சி வேண்டுமென்று முறையிடுகிருர்கள்.

சட்டசபையில், தி. மு. க. வை விட்டு பதினெட்டு உறுப்பினர்கள் போய்விட்டார்களாம்—வலது கம்யூனிஸ்டுகள் நாலைந்து பேர் தி. மு. க. உறவை அறுத்துக் கொண்டார்களாம். அதனல் தி. மு. க. பலமிழந்துவிட்டதாம். 166 உறுப்பினர்களைக் கொண்டுள்ள தி. மு. க., சட்டசபையில் பலமிழந்த கட்சியாம். கேரளத்தில் உள்ள கூட்டணி அரசு, மிகப் பெரும்பான்மை பலம் வாய்ந்த காட்சியாம்! இந்த வாதத்தைக் கேட்டு சிரிப்பு வருகிறதல்லவா? பாவம்! பரிதாபத்துக்குரியவர்கள்.

முதல் கட்டத்தில் முழுமையாக நான்கு ஆண்டு—அடுத்த முழுமையாக ஐந்து ஆண்டுகள் முடிந்துதான் அடுத்த தேர்தல் எப்போது என்று கேட்கிருேம்.

இடையில் இவர்கள் நுழைந்து கொண்டு “நீடிக்காதே! நீடிக்காதே!” என்பதாலோ! அல்லது அதிலே அவர்களு வெற்றி கண்டு விடுவதாலோ, கழகத்திற்கு என்ன கலக்கம் வந்துவிடப் போகிறது! இவர்கள் வெற்றி பெற்ருல், பழம் நழுவிப் பாலிலே விழுந்தது போலத் தான் நமக்கு இதை மட்டும் அந்த ஆத்திரக்காரர்கள் உணர்ந்து கொள்வது நல்லது.

(நன்றி, முரசொலி 15-1-76)

# செய்தித் தணிக்கை

அவசரகாலச் சட்டத்தின் 5ம் பிரிவின் கீழ் 1976 பெப்ரவரி 5ம் நாள் சிறீலங்காப் பிரதமரின் விதப்புரையின் மீது சிறீலங்கா குடியரசின் தலைவரினல்பிரகடனப்படுத்தபட்ட (பத்திரிகைத் தணிக்கைப்பற்றிய) ஒழுங்கு விதிகள் வருமாறு:—

(1) சிறீலங்காவின் அரசியலமைப்பின் 18 ஆம் பிரிவினல் உத்தரவாதமளிக்கட்பட்ட அடிப்படை உரிமைசளையும் சுதந்திரங்களையும் மீளப்பெறும் அல்லது குறைக்குப் உத்தேசத்திட்டம் அல்லது விதப்புரை எதனையும்—

(2) சிறீலங்காவின் ஏதேனும் பாகத்தைத் தனியாகப் பிரிப்பதற்காக அல்லது அதன் ஆள்புல பூரணத்துவத்தை சிதைப்பதற்கான கிளர்ச்சி அல்லது இயக்கம் எதனையும்— (Any agitation or movement for the secession of any part of Sri Lanka or the disruption of the Territorial integrity thereof;)

(3) சாதி, மதப்பூசல்கள் தொடர்பான சம்பவம் எதனையும்—

பதிவுசெய்யும், விவரிக்கும், தகவல் கொடுக்கும் அல்லது விமர்சிக்கும் அல்லது—

சாதிமதப் பூசல்களை உண்டாக்குப், அல்லது சிறீலங்கா வாழ் குடிமக்களின் வெவ்வேறு பிரிவினர்களிடையே, அல்லது கூட்டத்தாரிடையே வெறுப்புணர்ச்சியை, அல்லது எதிர்ப்புணர்ச்சியை ஊக்குவிக்குப் அல்லது வளர்க்கும் சாத்தியமுடையதாயிருக்கு—

நிழற்படம், படவிளக்கக் குறிப்பு, அல்லது வேறு விடயம் எதனையும்— அத்தகைய விடயத்தை வெளியிடுவதற்கு தகுதி வாய்ந்த அதிகாரியின் முன் அங்கீகாரத்தைப் பெற்ருலன்றியும் அது அவ்வாறு அங்கீகரிக்கப்பட்ட வடிவத்தில் இருந்தால் தவிரவும்— செய்தித்தாள், சஞ்சிகை, மாத வெளியீடு துண்டுப் பிரசுரம் அல்லது வேறு வெளியீடு எதனிலும் எவரும் வெளியிடுதலாகாது.

இவ்வொழுங்கு விதிகளின் கீழான ஏதேனும் தவறைப் புரிந்தவரெனச் சந்தேகிக்கப்பட்ட அல்லது குற்றம்சாட்டப்பட்ட ஆள் எவரையும் சட்டத்துறைத் தலைமையதிபதியின் சம்மதத்துடனன்றி - பிணையில் விடுதல் ஆகாது.

# மட்டக்களப்பு ‘வீராதி வீரன்’ கோட்டம் அடக்கப்பட்டது!

தமிழர் கூட்டணியின் மட்டக்களப்பு பொதுக்கூட்டத்தைக் குழப்புவதற்காக வெளியிட்ட துண்டுப்பிரசுரமொன்றில் உலகத்தின் உத்தமர்கள், நல்லவர்கள் வரிசையில் தன்னையும் ஒப்பிட்டுப் பார்த்துக்கொண்டு மகிழ்ச்சியடைந்தது ஒரு பிறவி.

எப்படியாவது கூட்டத்தை நடாத்துவோம் என தமிழ் இளைஞர் பேரவையினரும், தமிழர் கூட்டணியினரும் முனைந்து நின்றனர். கூட்டத்திற்கு முதல நாள், கூட்டணியினர் விளம்பரங்கள் செய்வதற்கு முன்பதாக முந்திரிகைக்கொட்டை முந்திக்கொண்டது. கூட்டத்தைக்குழப்புப நோக்கோடும் —கூட்டத்திற்குச்செல்கின்ற மக்களை பயமுறுத்தும் விதத்திலும் ஒரு துண்டுப் பிரசுரமொன்று வெளியிடப்பட்டது; வெளியிட்டதோடு மாத்திரம் நின்றுவிடாது ஒலிபெருக்கியின் மூலமும் மக்களைப் பயங்காட்டிக் கொண்டு திரிந்தது.

பண்புகெட்ட விதத்தில், முதலாவது நாடாளுமன்ற உறுப்பினர் வீட்டிற்கு முன்பாகவும் சென்று முக்கி முனகிக்கொண்டது. வெறியின் மயக்கத்தோடோ, வேறேதும் மயக்கங்களுடனே படுக்கைக்குச்சென்ற அது முதலாந்திகதி காலையில் எழுந்து கூட்ட விளம்பரங்களறுதாலும் விழித்துக் கொண்டது. அதிகாலையற் போனல் — அதுவப் பொலிசார் இருவரின் துணையோடு சென்ருல் தனியாகத் திரிகின்ற யாராவது கூட்டணைக் காரரார்களைத் தாக்கலாம் என்ற நினைப்போடு ஜீப் வண்டியில் சுற்றுலாப் புறப்பட்டது.

கல்லடிப் பாலத்திற்கு அண்மையில் கூட்டப் நடைபெறவிருந்த வளவைச் சுற்றி [illegible] இளைஞர்களை [illegible] பொலிசாரின் உதவியோடு பிடித்து ஜீப்பில் ஏற்றி தெருவீதிகளில கொண்டு திரிந்து ஒட்டப்பட்டிருந்த கூட்ட விளம்பரங்களைக்கிழிக்கும்படி வற்புறுத்தியுள்ளது. ‘குருவி மகேந்தரன’ என்ருல் அதற்குச் சரியான படம். தன்னல் தனியச்செய்யமுடியாததை பொலிசாரின் உதவியோடு செய்துள்ளது. அரசியல் அதிகாரியைப் பாதுகாக்கச்சென்ற அந்தக் காவலர்கள் காவற்தொழிலோடு நின்றிருக்கலாம். சும்மா போனவனை பிடித்து ஜீப்பில் ஏற்றி சப்பாத்துக் கால்களால் உதைத்து, துவக்குப் பிடியால் அடித்துத் துன்புறுத்தியுள்ளார்கள் அந்த வெறியர்கள்.

செய்தி கேள்விப்பட்டதும் தானைத்தலைவன் — தமிழ் இளைஞர்களின் தளபதி அமிர்தலிங்கம் கொதித்தெழுந்தார். அவரோடு திருவாளர்கள், இராஜதுரை கணேசலிங்கம் ஆகியோரும் இளைஞர் பேரவை உறுப்பினர்களும். தமிழர் கூட்டணியின் உதயசூரியன் கொடி கட்டிய ஜீப்பில் வண்டியிற் சென்று கூட்டம் பற்றிய துண்டுப் பிரசுரங்களை விநியோகம் செய்தனர்.

இளைஞர்களோடு தங்கி நின்று கூட்டவேலைகளைக்கவனித்துக்கொண்டிருந்த, திரு. கணேசலிங்கததின் வீட்டிற்கு முன்பாக அடிக்கடி காடையர்களை ஏற்றிக் கொண்டு பவனிவந்தது அந்தப் பிறவி. ஜீப்பில் குண்டர்களை ஏற்றிக்கொண்டு திரிவதனுலோ. தொலைபேசியில் பயமுறுத்துவதனுலோ விடுதலைவேட்கை கொண்டவர்களை அடக்கி விடலாமென அது எண்ணிக்கொண்டது போலும்!

ஆயிரக்கணக்கான ஆதரவாளர்களோடு வருகின்றேன். கூட்டணியினரோடு கூடிக குலாவும் மட்டக்களப்பு மக்களைப் பார்ப்பதற்கு வருகின்றேன் என்றெல்லாம் வீராப்புப்பேசிய வீராதி வீரன்— கூட்டம் ஆரம்பிப்பதற்கு ஓரிரு மணித்தியாலங்கட்கு முன்பும் வீதிகளில் ஓடித்திரிந்த ‘தம்பிராஜன்’ அஞ்சிப் படுந்தோ என்னவோ ஆரம்பித்த பின் ‘ஏனே’ அந்தப் பக்கம் தலைகாட்டவேயில்லை.

1-2-76லும், 4-2-76லும் மட்டக்களப்பு மாவட்டத்தில் கூட்டணியார் நடத்தவிருக்கும் கூட்டத்தினைப் பகிஷ்கரிக்கும் வணணம் பயங்காட்டித்திரிந்த வீராதி வீரனின் முகத்தில்; மட்டுநகர் வாழ் மானமுள்ள தமிழ் பேசும் மக்கள் — நீறுபூத்த நெருப்பாக தங்கள் உணர்ச்சிகளை மறைத்து வைத்துக்கொண்டிருந்த நீரமுள்ள தமிழ் இளைஞர்கள் என்றுமே அழியாதவிதத்தில் கரிபூசவிட்டார்கள். உணர்ச்சி வேகத்தோடு வெள்ளமெனத் திரண்டிருந்த மறத் தமிழர்களின் மத்தியில் கூட்டணித் தலைவர்கள் மாறி மாறி சவால் விட்டபொழுதெல்லாம் மக்கள் வெள்ளம் சந்தோச ஆரவாரம் செய்த காட்சியை ரௌடியின் கையாட்கள் வேதனையோடு பார்த்திருந்து சென்று கண்ணீரோடு கதைத்திருப்பார்கள். அதனைக்கேட்டு அந்த மகானுபாவன் இரவிரவாக இரத்தக் கண்ணீர் வடித்திருப்பார். தனது ஆட்டங்களுக்கு அழிவுகாலம் அண்மித்து விட்டதோ என தனக்குள் எண்ணிமிருப்பார்.

## தமிழர் கூட்டணி வாகனம் சேதப்படுத்தப்பட்டது

மட்டக்களப்பில் தனது காடைத்தனங்கள் தோல்வியடைந்ததைக் கண்டு மூலையில் முடங்கிக்கொண்ட முட்டாள் ஆரைப்பற்றையில் காடையர்களை ஒழுங்கு செய்து தெருவால சென்ற அவ் வண்டிக்கு கற்களால் எறிந்து சேதப்படுத்தினுராம் அது சம்பந்தமாக எண்மரைப் பொலிசார் தேடுகின்ருர்களாம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "கடைசி மணித்துளி வரை எனது உயிர் தமிழுக்காகவே பாடுபடும்!"

"நான் தூண்டிவிடுகிறேன் என்று சொன்னால், ஒரு சமுதாயத்தின் உணர்வை— ஒரு மொழி பேசுகின்றவர்களுடைய உணர்வை, ஓர் இன மக்களுடைய உணர்வை தூண்டி விடுவது என்று சொன்னால், அது இந்தக் காலத்திலே குறுகிய மனப்பான்மை என்று அழைக்கப்படுகிறது, தூண்டிவிடுவது என்பது ஒருமொழிக்காரர்களைப் பார்த்து இன்னொரு மொழிக்காரர்களைத் தாக்கு என்று சொன்னால், அந்தப் பொருளில் இன்றைக்கு தூண்டிவிடுவது என்கிற சொல்லை சிலர் பயன்படுத்துகிறார்கள் என்று கருதுகிறேன். அஃதல்ல; விளக்கு, நிறைய எண்ணெய்கள் நமக்கு உணர்த்திக் கொண்டிருக்கிறது;

நான்காயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தமிழ் மொழிக்கான இலக்கணத்தை தொல்காப்பியர் வகுத்தார் என்றால், அவர்தான் முதன் முதலாகத் தோன்றி தமிழ் மொழிக்கு இலக்கணம் வகுத்தார் என்று யாரும் கற்பனை செய்ய இயலாது; அந்தத் தொல்காப்பியருக்கும் ஒரு ஆசான் இருந்தார்; அவருக்குப் பெயர் அதங்கோட்டாசான்; இலக்கணம் வகுக்கின்ற அளவிற்கு ஒரு மொழி வளம் பெற்றிருக்கிறதென்றால், அது எத்தனை ஆண்டு காலத்திற்கு முன்பு தோன்றியிருந்தால் அது இலக்கண வரம்புகளைப் பெறுகின்றதிற்குள் மாத்திரமல்லாமல் கடல் கடந்தும் விரிவடைந்த வரலாறு.

கடாரம் கொண்டான்' சோழ மன்னன் ராஜராஜன், ராசேந்திர சோழன். இது வரலாறு. இமயத்தின்நெற்றியில் புலி, வில், கயல் இந்த இலச்சினையைப் பொறித்தார் தமிழ்நாட்டுமாமன்னர்கள் இது வரலாறு; செப்பிய மொழிகள் சேரனுக்கு உணர்த்தப்பட்டதும், படைகொண்டு சென்று, பத்தினிக்குச் சிலை சமைக்க கனக விசயன் தலையிலே கல் ஏற்றிக் கொண்டு வந்தான் சேரன் செங்குட்டுவன்—இது வரலாறு.

இப்படிப்பட்ட வரலாறுகள் நமக்குச் சொந்தமானவை; ஆனால் இன்றைக்கு நாம் வரலாற்றை மறந்தவர்களாய், நினைவு படுத்தினாலும் அப்படி நினைவுபடுத்துவது தவறுவதை — கோடிக்குக்கோடி நின்று திட்டினால், நீங்கள் போகும்காலத்தில் உங்களுக்கு ஒரு கோடி கூடக் கிடைக்காது. (நான் ஒரு கோடி என்று சொல்வது வேட்டியைச்சொல்கிறேன்.)


பூம்புகாரை உருவாக்கினோம் என்றால், அந்தப் பூம்புகாரின் கலைக்கூடத்திற்கு எவ்வளவு செலவழிக்கப்பட்டிருக்கிறதோ, அதைவிட இன்னும் கொஞ்சம் அதிமாக அங்கே வாழும் மீனவ மக்களுக்கு இலவசமாக வீடு கட்டித்தரசெலவு செய்யப்பட்டிருக்கிறது; கட்டபொம்மன் கோட்டை அமைத்திருக்கிறோம் என்றால் அந்தக் கட்டபொம்மனின் வாரிசுதாரர்கள் இருநூறு பேர்களுக்கு அந்தக் கோட்டைக்கு அருகேயே இலவசமாக வீடுகளைக்கட்டித் தந்திருக்கிறோம். அதனுடைய திறப்பு விழா அண்மையில் நடைபெற இருக்கிறது.

இங்கே வள்ளுவர்கோட்டத்தை அமைக்கிறோம் என்றால், பதினைந்து மாதங்கள், அல்ல, இந்த வாய்ப்பு நமக்குக் கிடைத்ததே, அவ்வளவு உயரத்திற்கு அந்தக்கலசம் போய்விட்டால், பிறகுயார் அங்கே ஏறிப்போய்போடப் போகிறார்கள்? ஆகவே அது கீழே இருக்கும்போதே மாலையைப்போடுவோம் என்று போட்டேன். எத்தகைய உணர்வு, எந்த அளவிற்கு மன எழுச்சியை எனக்கு காலையில் அது ஏற்படுத்தியது என்பதை நான்தான் உணரமுடியும்.

வள்ளுவர் கோட்டத்திலே அமைக்கவிருக்கின்ற கலையரங்கம், இந்தியாவிலேயே அவ்வளவு பெரிய கலையரங்கம் வேறு எங்கும் கிடையாது என்ற வகையில் அமைக்கப்படுகின்ற கலையரங்கம் ஆகும்,

அதிலே வள்ளுவரைப் பற்றிய ஆராய்ச்சிக்கருத்தரங்குகள், கவியரங்கங்கள், பட்டி மன்றங்கள், எல்லாம் நடைபெறவிருக்கின்றன. இந்த மேடையின் இரண்டு பக்கமும் என்ன வைக்கப் போகிறீர்கள் என்று கேட்டேன்; இன்னும் முடிவு செய்ய

## சுதந்திரன் கூற்று உண்மையாகியது!



ஈழத்தமிழ் மக்களுக்கு எதிராக அரசாங்கம் திட்டமிட்டு செய்துவரும் சதிகளை அம்பலப்படுத்தி வரும் சுதந்திரன், தமிழக தி. மு. க. அரசுக்கெதிராகவும் டெல்லியில் சதி நடப்பதை 14-1-76 இதழிலேயே அம்பலப்படுத்தியிருந்தது. சுதந்திரன் கூற்று இப்போது உண்மையாகிவிட்டதல்லவா?

## தி.மு.க. அரசு கலைக்கப்படுமுன் கலைஞர் நிகழ்த்திய எழுச்சியுரை!

இருந்தாலும் எரிந்துகொண்டிருக்கிற திரி நீண்ட நேரம் எரிந்த காரணத்தால், கருகி, எரியமுடியாமல தவித்துக் கொண்டிருக்கிற நேரத்தில், ஒரு சிறிய குச்சியை எடுத்து அந்தத் திரியைத் தூண்டி விட்டால், ஏற்கனவே இருக்கிற எண்ணெயின் அடிப்படையில் விளக்கு சுடர் விட்டு எரியும். ஆகவே விளக்கு நன்றாக எரிவதற்காக தூண்டிவிடுகின்ற தூண்டுதல்தான் நான் இங்கே குறிப்பிட்ட தூண்டுதலேயல்லாமல், இனனொரு இனத்தைப் போய்த் தாக்கு, இன்னமொழிக்காரர்களைப் போய்த் தாக்கு என்று அப்படித் தூண்டிவிடுகின்ற தூண்டுதல் அல்ல, அந்தத் தூண்டுதல் நடைபெற்றால்தான் அது குறுகிய நோக்கம் என்று கூறலாம்.

நாம் செய்யும் இந்தத் தூண்டுதலுக்கு யாராவது குறுகிய நோக்கம் என்று சொல்வார்களானால், அதை நாங்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறோம். இது தான் குறுகிய நோக்கம் என்றால், இந்தத் தூண்டுதலைவிட்டு நான் என்றைக்கும் அகலமாட்டேன்.

ஒரு சமுதாயத்தில் மொழி எவ்வளவு முக்கியமானது; மொழி உணர்வு இல்லாவிட்டால் அந்தச் சமுதாயம் எப்படி பட்டுப்போய்விடும் என்பதை உலக வரலாறு

அளவிற்கு பண்பட்டிருக்கும் என்று பார்த்தால், தொல்காப்பியருக்கு முன்பே நான்கைந்தாயிரம் ஆண்டுகளாவது தமிழ் தமிழகத்திலே தோன்றியிருந்தால் தான் இப்படிப்பட்ட ஒரு இலக்கணத்தைச் செய்திருக்க முடியும். அதனால் தான் பல இடங்களில் இலக்கணத்தை வகுத்த தொல்காப்பியர் அவர்கள் எண்மனார் புலவர் என்று கோடிட்டுக் காட்டுகிறார். ஏற்கனவே இருந்த புலவர்கள் இப்படிச் சொல்வார்கள் என்று தொல்காப்பியர் சொல்வதில் இருந்தே, அவருக்கு முன்பே பல புலவர்கள் இருந்திருக்கிறார்கள்; ஆக ஏறத்தாழ பத்தாயிரம் ஆண்டுகளாவது தமிழின் வயது இருந்தே தீரவேண்டும்; அப்படிப்பட்ட தொன்மையான மொழியில்; வளம், சிறப்பு, வீரம் இலக்கியம், காப்பியம், காவியம் எல்லாம் உண்டு.

நாம் நம்மளவிலே நம்முடைய தமிழ் மொழியைக் காப்பாற்றிக்கொள்ளவேண்டும்; அதற்கு நாம் இன உணர்வைப் பெற்றாகவேண்டும்; அந்த இன உணர்வும், மொழி உணர்வும் ஒன்றிக் கலந்தால்தான் இந்தச் சமுதாயம் தன்னுடைய வரலாற்றை, மரபை, பழம் பெரும் இலக்கியங்களை மங்காமல், மறையாமல் காத்திட இயலும், நம்முடைய வரலாறு இந்த [illegible]

என்று குற்றஞ்சாட்டப்படுகிறவர்களாய், யாரால்— தமிழர்களாலேயே குற்றஞ் சாட்டப்படுகிறவர்களாய், தமிழ் நாட்டில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

இங்கே பேசியவர்கள் எல்லாம் வள்ளுவர் கோட்டம் அமைவதைப் பற்றியும், பூம்புகார், கட்டபொம்மன் நினைவுக்கோட்டை அமைக்கப்பட்டது பற்றியும் சொன்னார்கள்.

இவைகள் எல்லாம் செய்யப்படுகின்ற நேரத்திலே ஒரு அரசு தன்னைத்தேர்ந்தெடுத்த மக்களுக்கு ஆற்ற வேண்டிய பணிகளை எல்லாம் மறந்துவிட்டு, அவைகளையெல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு, அந்த மக்கள் தந்த வரிப்பணம் அனைத்தையும் இந்தக் காரியங்களுக்காகவே செலவுசெய்தது என்று யாராவது நிரூபிப்பீர்களானால். அவர்களே என்னை நடுவீதியில் சமணர்களைக்கழுவிலேஏற்றியதைப் போல் கழுவேற்றுவதற்கு நான் தயாராக இருக்கிறேன்.

இந்த எட்டாண்டு காலத்தில் தமிழ் நாட்டின் வரவு செலவுத்திட்டம் ஏறத்தாழ நான்காயிரம்கோடி ரூபாய் என்றால், அதில் வள்ளுவர் கோட்டத்திற்காக — புதிய பூம்புகாருக்காக — கட்டபொம்மன் கோட்டைக்காக — திருவள்ளுவரின் சிலையை கன்யாகுமரி முனையிலே அமைப்பதற்காக நாம்செலவிடுகின்ற தொகை ஒரு கோடி ரூபாய்க்கும் கொஞ்சம் அதிகம் அவ்வளவுதான். இந்த ஒரு கோடி ரூபாய் செலவிற்கா, கோடிக்குக் கோடி நின்று பேசுகின்றார்கள்? தமிழுக்குச் சிறப்புச் [illegible]

நாள் ஒன்றுக்கு 750 தொழிலாளர்கள் இதிலே வேலை செய்திருக்கிறார்கள். சோசலிசம் பேசுகிறார்கள்; ஏழையெளியவர்களைப்பற்றி நீலிக் கண்ணீர் வடிக்கிறார்கள்; அவர்கள் வள்ளுவர்கோட்டம் என்றால், ஏதோ ஐம்பது இலட்சம் ரூபாய் வெளி நாட்டிலே கொண்டு போய் கொடுத்து விட்டு ஒருபொம்மையை வாங்கி வந்து வைப்பதைப்போல நினைத்துக் கொண்டு கதைக்கிறார்கள்; அப்படியல்ல; பதினைந்து மாதங்கள் 750பேர் சிற்ப பயிற்சிபெற்றவர்களும், மற்றவர்களும் அங்கே பணியாற்றுகிறார்கள்; அதே நேரத்தில் வள்ளுவர் கோட்டமும் உருவாகியிருக்கிறது.

ஆகவே, இப்படிப்பட்ட வரலாற்றுப் புகழ்மிக்க காரியங்களைச்செய்யும்நேரத்தில் அதிலே தமிழ் உணர்வு' தமிழ்மொழி உணர்வு, தமிழன் என்கிற சமுதாய உணர்வு, இவைகள் மாத்திரமல்ல, ஏழையெளிய மக்களைக்காப்பாற்ற வேண்டும் என்ற மனிதாபிமான உணர்வும் அதிலே கலந்திருக்கிறது என்பதை நான் இந்தக் கோட்டங்களைப் பழிக்கின்றவர்களுக்கெல்லாம் விளக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்று காலையில்கூட வள்ளுவர் கோட்டத்தின் பணியினை நான் காணச்சென்றேன். அதன் உச்சியில் வைக்கவேண்டிய கலசத்தினை மேலே கொண்டு போகும் முயற்சியில் ஈடுபட்டிருந்தார்கள். அந்தக் கலசத்திற்கு மாலைபோட்டு, சந்தனப் பொட்டெல்லாம் வைக்கவேண்டுமென்று சொன்னார்கள். நான் பொட்டு வைப்பதிலே, அந்தச் சடங்குகளிலே நம்பிக்கையில்லாதவன் என்றாலும், அவர்கள் சொன்னதற்காக

வில்லை என்று சொன்னார்கள், நான் அவர்களுக்கு, ஒரு பக்கத்தில் தொல்காப்பியரையும், இன்னொரு பக்கத்தில் அதங்கோட்டாசானையும் வைத்துவிட்டால் அநேகமாக நம்முடைய வேலை முடிந்துவிடும் என்று யோசனை சொன்னேன்.

ஏனென்றால் இருக்கிற காலம் எவ்வளவு காலம் என்பதல்லக் கேள்வி, அந்தக் காலத்தில் என்ன செய்தோம் என்பதுதான்கேள்வி. அதைத் தமிழுக்காக செய்தோமா? இந்த இனத்திற்காகச்செய்தோமா? கிடைத்திருக்கின்ற இந்தப் பதவி, பணியாற்றுகின்ற ஒரு வாய்ப்பு; பதவிபோன பிறகும் நம்மால் அந்தப் பதவி என்கிற அடிப்படையிலே பணியாற்ற முடியாவிட்டாலும் வருகின்றவர்களைப் பணியாற்று என்று சொல்கின்ற ஆற்றல் படைத்தவர்கள் நாம்!

ஆகவே அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை; இனி உயிருடன் இருக்கிற காலம் இன்னும் சில மணித்துளிகள்தான் என்றாலும், அந்தத் துளியும் இந்த உயிர் தமிழுக்காகத்தான் பாடுபடும். இந்த உணர்வினை என்னரும் மாணவக் கண்மணிகளே நீங்கள் எல்லாம் பெற்றாக வேண்டும்.

(21.1;76 சென்னையில் நடைபெற்ற அனைத்துக் கல்லூரி மாணவர் பொங்கல் விழாவில் பேசியது.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது.

சுதந்திரன்
SUTANTIRAN

# அரசியல் விபசாரியின் காடைத்தனம்!

1—2—76ல் மட்டுநகரில் தமிழர் கூட்டணியின் பொதுக்கூட்டம் நடைபெற விருந்த வளவைச் சுத்தம்செய்யச்சென்ற இளைஞர் மகேந்திரனை பொலிசாரின் உதவியோடு ஜீப்பில் பலவந்தமாக ஏற்றிச் சென்று பலமாகத்தாக்கினராம் அரசியல் விபசாரி. தெருவீதிகளில் ஒட்டியிருந்த கூட்ட விளம்பரங்களையும் ஜீப்பில் சென்று பலவந்தமாக கிழிப்பித்தாராம். தெருவில் அலைந்து திரிகின்ற கட்டாக்காலி மாடுகள் செய்கின்ற வேலையை இந்த மடையன் செய்தானே என மக்கள் பேசிக்கொள்கின்றனர்கள்.

ஜீப்பில் வைத்து அரசியல் விபசாரியும் அவரோடுகூடச் சென்றபொலிசாரும், மகேந்திரனை சப்பாத்துக்கால்களால் தாக்கியும், துவக்கின் பின்புறத்தால் அடித்தும் துன்புறுத்தினர்களாம். இச்சம்பவம் குறித்து சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## காங்கேசன்துறையில்

# பொலிசார் காடைத்தனம்!

## தமிழர்கூட்டணி அலுவலகம் அடித்துநொருக்கப்பட்டது! இரு இளைஞர்கள் வைத்தியசாலையில்!

காங்கேசன் துறையிலுள்ள தமிழர் கூட்டணியின் கிளை அலுவலகம்பொலிசாரால் பெப்ரவரி 4ம் திகதி நள்ளிரவு அடித்து நொருக்கப்பட்டது.

இது பற்றி பொலிசுக்கு புகார் செய்யப்போன தமிழ் இளைஞர்கள் இருவரும் பொலிஸ் நிலையத்தில் வைத்துத்தாக்கப்பட்டதாகவும், இந்த இளைஞர்கள் இப்போது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது. இந்த அட்டூழியத்தைக்கண்டித்து காங்கேசன்துறைப் பகுதியில் 5-2-76 வியாழக்கிழமை கடையடைப்பும் நடைபெற்றது.

பெப்ரவரி 4ம் திகதி இரவு சிவில் உடையில் சென்ற பொலிசார் கூட்டணி அலுவலகத்தை அடித்து நொறுக்கியதோடு அங்கிருந்த தமிழ் இளைஞர்களையும் தாக்கினராம். இத்தாக்குதல் பற்றி பொலிஸ் நிலையத்துக்கு புகார்செய்யச்சென்றபோதும் இந்த இளைஞர்கள் பொலிஸ் நிலையத்தில் திரும்பவும் தாக்கப்பட்டார்களாம்.

தமிழர் கூட்டணிசெயலாளர் நாயகம் அ. அமிர்தலிங்கம், சட்டத்தரணிகள் சு. நடராசா, அ. குமரகுரு ஆகியோர் இது விடயமாக யாழ்பொலிஸ் அதிபருடன் தொடர்பு கொண்டதையடுத்து அணிவகுப்பு நடைபெற்றதென்றும் இதில் ஐவர் அடையாளம் காட்டப்பட்டதாகவும் தெரியவருகிறது. தாக்குதலுக்குள்ளான இளைஞர்கள் இப்போது ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

மட்டுநகர் செய்திகள்

## ஜீப்புக்கு கல்வீச்சு!

தமிழர் கூட்டணி பிரமுகர் திரு. கணேசலிங்கின் கார் மட்டக்களப்பு தொகுதியில் பெப்ரவரி 4ம் நாள் பல தடவை அரசியல் காடையர்களின்கல்வீச்சுக்கு இலக்காகியது. இப்படிக் கல்வீசியவர்கள் என்று சந்தேகப்படும் சிலரை பொலிசார்கைதுசெய்து விளக்கமறியலில் வைத்துள்ளனர். இவர்களில் ஒருவர் மட்டக்களப்பு கச்சேரியில் வேலை செய்யும் ஓர் அரச ஊழியராம்!

## கோப்பாயில் விசேட வழிபாடு!

தமிழர் கூட்டணித் தலைவர்களின் பெயரிலும், தமிழ் மக்களின் அபிலாஷைகள் நிறைவேறவேண்டியும், கோப்பாய் வீரபத்திர சுவாமி கோவிலில் விசேட அபிஷேகம் பூசைகள் நடைபெற்றன. இவற்றை 15 வயது மாணவன் செல்வன் குகனேசன் முன்னின்று நடத்தினர்.

## தமிழர் கூட்டணி கருத்தரங்கு

கொழும்பில் தந்தை செல்வநாயகத்தின் இல்லத்தில் வாராவாரம் நடைபெறும் கூட்டணி ஆதரவாளர்களின் கருத்தரங்கு இன்று புதன்கிழமை 11-2-76 மாலை 6.30 மணிக்கு நடைபெறுகிறது. முன்னாள் உடுப்பிட்டி பா உ. திரு மு. சிவசிதம்பரம் பேசுகிறார்.

## இஸ்லாமியர் இணைப்புப்பேரவை!

31-1-76ல் கல்முனையில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட அகில இலங்கை இஸ்லாமியர் இணைப்புப்பேரவையின் தலைவராக டாக்டர் உதுமா லெவ்வையும், பொதுச்செயலாளராக கே. எஸ். ஏ. கபூரும், துணைத்தலைவராக மன்சூர் கையூமும், இணைச்செயலாளராக மருதூர்வாணனும், பொருளாளராக அ. லெ. மீராசாகிபும் தெரிவசெய்யப்பட்டனர். ஏழு நிர்வாக உறுப்பினரும் தெரிவுசெய்யப்பட்டனர். தமிழர் கூட்டணியின் கட்டுப்பாட்டுக்குள் இப்பேரவை இயங்கும்.

## தமிழர் கூட்டணி ஆதரவாளருக்கு கத்திக்குத்து

தமிழர் கூட்டணியின் மாபெரும் பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு வீடு திரும்பிய தாமோதரம் என்ற கட்சி அனுதாபி ஒருவரை காடையர்கள் வழிமறித்து கத்தியால் குத்தி, சைக்கிள் சங்கிலியினாலும் தாக்கினார்களாம். இது சம்பந்தமாக இருவரைப் பொலிஸ் தேடுகின்றது. குத்தப்பட்டவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். குத்தப்பட்டவரின் குடும்பத்திற்கு உதவுவதற்காக மட்டக்களப்பு தமிழ் இளைஞர் பேரவையினர் நிதி சேகரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

## உணவுப் பொருட்கள் கிடைக்க இ. தொ. கழகம் உடனடி நடவடிக்கை!

கந்தப்பளையைச் சேர்ந்த கோட்பெல் தோட்ட நிர்வாகம் அத்தோட்டத் தொழிலாளர்களுக்கு வழமையாக வழங்கப்படும் உணவுப்பொருட்களான அரிசி, மாவு போன்றவைகளை கடந்த மூன்று வாரங்களாக மறுத்து வந்தது. தோட்ட நிர்வாகத்தின் இச்செயலால் பசி, பட்டினிக்குள்ளாகிய தொழிலாளர்கள் இ. தொ. கழக பணி இருகலை பணிமனையில் புகார் செய்தனர். இதுதொடர்பாக இருகலை இ. தொ. கழக மாவட்டப்பிரதிநிதி திரு. வ. ஆறுமுகநாதனும், வ. தோ. தொ. யூனியன் மாநிலப் பிரதிநிதி திரு. எம். செல்லையாவும் கூட்டாக மேற்கொண்ட நடவடிக்கையினால் தொழிலாளர்களுக்குரிய உணவுப் பொருட்கள் உடனடியாக வழங்கப்பட்டுள்ளது. இத்தோட்ட நிர்வாகத்தின் கெடுபிடியை எடுத்துக்காட்டி அத்தோட்டத்தை நிர்வகிக்கும் ஏஜன்சிக்கும். நுவரெலியா பகுதி அரசாங்க அதிபருக்கும் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக கருத்துத்தெரிவித்த மாவட்டப் பிரதிநிதி திரு. ஆறுமுகநாதன் பின்வருமாறு கூறியுள்ள. தொழிலாளர்களிடத்தில் இருந்து உழைப்பை எதிர்பார்க்கும் தோட்ட நிர்வாகம் அவர்களைப் பட்டினி போட்டுக்கொன்றுவிடுவதால் தாங்கள் எதிர்பார்க்கும் ஆதாயத்தைப்பெற்றுவிடமுடியாது. தொழிலாளியிடத்தில் உழைக்கக்கூடிய சக்தி இருந்தால்தான் அவனால் உழைக்கமுடியும். இதற்கு உணவு முக்கியம். தோட்ட தொழிலாளிக்கு வேண்டிய அத்தியாவசிய உணவுப்பொருட்களை தடையில்லாது தோட்ட நிர்வாகம் வழங்கினால் அவர்கள் எதிர்பார்த்த ஆதாயத்தைவிட கூடுதலாகவே பெறமுடியும் — இதைத்தோட்ட நிர்வாகங்கள் முதலில் உணர்ந்து அதற்கேற்றவாறு செயல்பட வேண்டும். மேலும் தோட்டங்கள் அரசுடமையாக்கப்பட்டிருக்கும் இவ்வேளையில் அரசுக்கு சொந்தமான ஒரு தோட்டத்தில் மக்கள் இவ்வாறு கொடுமைப்படுத்தப்படுவது மிகவும் அநீதியாகும். இவ்வாறு தோட்ட நிர்வாகிகள் தொழிலாளர்களின் நலனில் அக்கரை கொள்ளாததான் தோன்றித்தனமாக நடந்து தொழிலாளர்களை வஞ்சிப்பதை அரசு உடன் கவனத்திற்கொண்டு அவர்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என கூறியுள்ளார்.

## உரும்பராயில் பொங்கல்!

உரும்பராயில் உதயசூரியனுக்கு பொங்கல் நடைபெற்றது. இப்பொங்கலை தியாகி சிவகுமாரனின் தாயார் திருமதி பொன்னுத்துரை முன்னின்று நடத்தினர். சுமார் 2000 பாடசாலை மாணவ மாணவிகள் இப்பொங்கலில் கலந்து கொண்டனர். இதையடுத்து அவர்களுக்கு பொங்கல பரிமாறப்பட்டது.

## துண்டுப்பிரசுரம் விநியோகித்த இளைஞர் பேரவை உறுப்பினர் தாக்கப்பட்டார்!

துண்டுப் பிரசுரமொன்றை விநியோகம் செய்துகொண்டிருந்த தமிழ் இளைஞர் பேரவையின் நீர்கொழும்புகிளையைச்சேர்ந்த ஒருவரை குண்டர்கள் வழிமறித்துத் தாக்கினர்களாம். செய்தியைக்கேள்வியுற்ற இளைஞர்களும் கூட்டணி ஆதரவாளர்களும் கூட்டமாகத் திரண்டு சென்று துண்டுப்பிரசுரம் விநியோகித்த பொழுது குண்டர்கள் ஓடி ஒழித்துவிட்டனராம்.

## பிறந்த நாள் விழா

தமிழ் இளைஞர் பேரவைப் பிரமுகரும் அண்மையில் சிறையிலிருந்து மீண்டவருமான கொக்குவில் தாவடியைச் சேர்ந்த திரு. பொன். மதிமுகராசா விஜயலட்சுமி தம்பதிகளின் மகள் செல்வி விஜயமதி தனது முதலாவது ஆண்டு பிறந்த நாளை 13-2-76 வெள்ளிக்கிழமை கொண்டாடுகிறார்.

## இந்து மன்றம்

புத்தளம் சிமெந்து தொழிற்சாலை இந்து ஊழியர்கள் அனைவரும் சேர்ந்து சைவத்தையும் தமிழையும் பேணிக்காக்கும் பொருட்டு இந்து மன்றம் ஒன்றை 7-1-76ல் ஆரம்பித்துள்ளார்கள்.

மில்க்வைற் சலவைப்பவுடர்

விஞ்ஞான ரீதியில் கூடுதல் நீலம் கலந்து தயாரிக்கப்பட்ட மில்க்வைற் சலவைப் பவுடரில் கூடுதல் பலன் பெற உங்கள் உடைகளை வெந்நீரில் சில நிமிடங்கள் ஊறவிட்டு சலவை செய்யுங்கள்.

மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்,
த பெ. இல 77, யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு - 12 பண்டாரநாயகா வீதி 194 ஏ, இலக்கத்தில் 1976-ம் வருடம் பெப்ரவரி மாதம் 11-ந் திகதிபுதன் கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org